# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் :158/CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு:CITU&EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005.

**Telephone No : 044-28548529** **E-mail: coteecitu@gmail.com**
**Fax No : 044-28516574** **Web: www. cotee.org**


**சுற்றறிக்கை எண் 22/2014** **நாள் : 26/09/2014**

**பெறுநர்**

மாநில நிர்வாகிகள்
கிளைச் செயலாளர்கள்
மாநில செயற்குழு உறுப்பினர்கள்

அன்பான தோழரே,

வணக்கம்,

2013 - 2014 ஆம் ஆண்டு கூடுதல் போனசிற்கான கோரிக்கை 23.9.2014 அன்று நிர்வாகத்திடம் மத்திய அமைப்பு சார்பாக கொடுத்துள்ளோம்.

கொடுத்துள்ள கோரிக்கை விபரம்

1) வாரிய ஊழியர்கள், அலுவலர்கள், பொறியாளர்கள் ஒப்பந்த தொழிலாளர்கள் மற்றும் பகுதி நேர ஊழியர்களின் போனஸ் மற்றும் கருணைத் தொகை 30% சதம் வழங்கிட வேண்டும்.

2) போனஸ் வழங்கும் சட்டத்தில் உள்ள ஊதிய வரம்புகளை கணக்கில் கொள்ளாமல் பொறியாளர்கள், அதிகாரிகள் உட்பட அனைத்து ஊழியர்களுக்கும் 30 சதம் போனஸ் மற்றம் கருணைத் தொகையும் வழங்கப்பட வேண்டும்.

3) 31.3.2014 வரை பணியாற்றும் அனைத்து ஒப்பந்த மற்றும் பகுதி நேர ஊழியர்களுக்கும் நிரந்தர ஊழியர்களுக்கு வழங்குவதைப் போல 30 சதம் போனஸ் மற்றும் கருணைத் தொகை வழங்கிட வேண்டும் என்ற கோரிக்கை முன் வைத்துள்ளோம்.

## 7.10.2014 போனசுக்கான இயக்கம்

மாநில பொதுத்துறை சங்கங்களின் ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் 23.9.2014 அன்று நடைபெற்று இந்த ஆண்டு போனஸ் மற்றும் கருணைத் தொகையாக 30 சதவீதம் வழங்கிட வேண்டும் என்ற கோரிக்கையை 30.9.2014 க்குள் சம்மந்தப்பட்ட துறை தலைமையிடம் வழங்கிடுவது. நாம் வைத்த கோரிக்கைகளை வலியுறுத்தும் விதமாக 7.10.2014 அன்று மாநில பொதுத்துறை நிறுவன தொழிற்சங்கங்கள் இணைந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன் கோரிக்கை கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடத்திட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டு சுற்றறிக்கையாகவும், பத்திரிக்கைச் செய்தியாகவும் வெளியிடப்பட்டுள்ளது. இந்த இயக்கத்தை மாவட்ட ரீதியாக வெற்றிகரமாக்கிட மின் ஊழியர் மத்திய அமைப்பு முன் முயற்சி எடுத்து இதர நிறுவன தொழிலாளர்களையும் ஒன்றிணைந்து 7.10.2014 இயக்கத்தை வெற்றிகரமாக நடத்திட வேணுமாய் கேட்டுக் கொள்கிறோம். இது சம்மந்தமாக வெளியிடப்பட்ட சுற்றறிக்கை நகலையும் இத்தோடு இணைத்துள்ளோம்.

## 14.10.2014 தேசிய மின்சார பொறியாளர் மற்றும் தொழிலாளர் கூட்டமைப்பின் பிரச்சார இயக்கம்

மின்பற்றாக்குறையும், மின் கட்டண உயர்வையும் உருவாக்கும் மின்சார சட்டம் 2003ல் தேவையான மாற்றங்களை உருவாக்கிட வேண்டியும், இந்திய மின்துறையில் நிரந்தர தொழிலாளர்கள் ஆற்றும் பணிகளை ஒப்பந்த, அவுட்சோர்சிங் முறையில் செய்ய வைத்து, அதில் ஈடுபடுத்தும் பணியாளர்களுக்கு சட்டப்படி சொல்லப்பட்ட சலுகைகளைக் கூட வழங்காமல் உழைப்புச் சுரண்டலை அரங்கேற்றும் மத்திய, மாநில அரசின் கொள்கைகளை கண்டித்தும் 8.7.2014 தேசிய மின்சார பொறியாளர், ஊழியர்களின் கூட்டமைப்பு முடிவினையொட்டி தமிழகம் முழுவதும் மேற்கூறிய முழக்கங்களை பணியாளர்கள் மற்றும் பொது மக்கள் மத்தியில் கொண்டு செல்லும் வகையில் தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு, மின்சார தொழிலாளர் சம்மேளனம், தொழிலாளர் முன்னேற்ற சங்கம், பொறியாளர் கழகம், பொறியாளர் சங்கம், பொறியாளர் அமைப்பு ஆகியவைகள் கூட்டாக இணைந்து 14.10.2014 அன்று மின் வாரிய அலுவலகங்கள் முன்னால் விளக்க பிரச்சாரக் கூட்டங்களை நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

தேசிய மின்சார பொறியாளர், தொழிலாளர் கூட்டமைப்பின் முடிவுகளை முழுமையாக நிறைவேற்றிடும் வகையில் மேற்கூறிய சங்கங்களின் கூட்டுக் கூட்டங்களை நடத்தி 14.10.2014 இயக்கத்தை வெற்றிகரமாக்கிட முன் முயற்சி எடுத்திட வேண்டுகிறோம்.

20.9.2014 சுற்றறிக்கை வரிசை எண் 7ல் அனல் மின் நிலையத்தில் பணியாற்றும் நிரந்தர தொழிலாளர்களின் கோரிக்கையை முன் வைத்தும், அங்கு பணியாற்றும் ஒப்பந்த ஊழியர்களுக்கு கூலி உயர்வு போன்ற அடிப்படை உரிமைகளை அமல்படுத்து 8.10.2014 அன்று அனல் மின் நிலையம் முன்னர் பெருந்திரள் ஆர்ப்பாட்டம் நடத்துவது என்று குறிப்பிடப்பட்டுள்ளதை, 8.10.2014 அன்று 4 அனல் மின் நிலையங்களில் பணியாற்றும் ஊழியர்களை திரட்டி மின்வாரிய தலைமையகம் முன்னர் பெருந்திரள் ஆர்ப்பாட்டம் நடத்துவது என்று மாற்றிபடித்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

இவைகளின் அடிப்படையில் 8.10.2014 இயக்கத்தை சென்னையில் வெற்றிகரமாக்கிட அனைத்து முயற்சிகளிலும் அனல் மின் நிலைய நிர்வாகிகள் ஈடுபட வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்.

ஒப்பந்த தொழிலாளியாக பணியாற்றி கணக்கீட்டாளர் இரண்டாம் நிலையாக பணியில் சேர்ந்தவர்களை ஒப்பந்தம், திருத்தப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் சுமார் 3400க்கும் மேற்பட்ட கணக்கீட்டாளர் இரண்டாம் நிலையில் உள்ளவர்களை கணக்கீட்டாளராக பதவி உயர்வு வழங்கிட வேண்டும் என்று நாம் எடுத்த தொடர் முயற்சியின் விளைவாக அவர்களுக்கு பதவி உயர்வு கொடுப்பது என்று முடிவு செய்து அதற்கான டி.பி.சி. களை திட்டமிட்டத்தில் நடத்தி அதனுடைய தொகுப்பை மின் வாரிய தலைமையகத்திற்கு அனுப்பி வைத்திட வேண்டும் என்ற வாரிய உத்திரவு இன்று பிறப்பிக்கப்பட உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

சென்னைக்கு அருகாமையில் உள்ள வல்லூரில் என்.டி.சி.எல். கம்பெனி லிமிடெட் சார்பாக அமைந்துள்ள மின் நிலையத்தில் உள்ள ஊழியர்களை மின் ஊழியர் மத்திய அமைப்பில் உறுப்பினர் ஆக்க தொடர் முயற்சி எடுத்து வருகிறோம். அதனுடைய ஒரு அம்சமாக சென்ற 14.9.2014 அன்று ஒரு ஊழியர் கூட்டமும் நடத்தப்பட்டுள்ளது. அதனுடைய தொடர்ச்சியாக 5.10.2014 அன்று அகில இந்திய சிஐடியு செயலாளர்களில் ஒருவரான தோழர் தேவ்ராய் அவர்கள் கலந்து கொள்ளும் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

2014 ஆம் ஆண்டு துவங்கி 9 மாதங்கள் நிறைவடைந்த நிலையில் சுமார் 14000 உறுப்பினருக்குண்டான சந்தவே வந்துள்ளது என்பதை கவலையோடு குறிப்பிட்டு அக்டோபர் இறுதிக்குள் 2014 ஆம் ஆண்டு பழைய உறுப்பினர் புதுப்பித்தலை முடித்திட வேண்டும் என்ற முடிவை முழுமையாக நிறைவேற்றும் வகையில் செயலாற்றிட வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்.

தணிக்கை, கிளை பேரவைகள் முடிக்காத கிளைகள் அவசர அடிப்படையில் தணிக்கையையும், பேரவையையும் உடனடியாக நடத்திட திட்டமிட கேட்டுக் கொள்கிறோம்.

2014 ஆம் ஆண்டு புதியதாக உறுப்பினர் சேர்ந்த உறுப்பினர்களுக்கு மின்கதிர் அனுப்புவதை உத்தரவாதப்படுத்திட 2014 ஆம் ஆண்டு புதியதாக சேர்க்கப்பட்ட உறுப்பினர்களின் முகவரியோடு கூடிய பெயர் பட்டியலை அனுப்பிடவேண்டும் என்று சென்ற சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளோம். ஆனால் எந்தகிளையில் இருந்தும் அதற்கான பெயர் பட்டியல்கள் இதுவரை வரவில்லை என்பதை குறிப்பிட்டு இதற்கான அவசியத்தை உணர்ந்து அப்பட்டியலை அனுப்பி வைத்திட வேணுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

உதவி பொறியாளர், இளநிலை பொறியாளரில் இருந்து உதவி செயற்பொறியாளராக பதவி உயர்வு வழங்க டி.பி.சி. முடிந்து பேனல் பட்டியல் இன்னும் இரு தினங்களில் வெளியிடப்பட உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழக அரசு பதிவறை எழுத்தர்களை பதிவரை உதவியாளராக பதவி மாற்றமும், பணப்பயனும் அளித்து உத்தரவு பிறப்பித்துள்ளது அவ்உத்தரவை மின் வாரியத்தில் அமல்படுத்திட வேண்டி மின் ஊழியர் மத்திய அமைப்பு கொடுத்த கடிதத்தின் அடிப்படையில் பதிவறை எழுத்தாா்கள் எவ்வளவு ஊழியர்கள் உள்ளார்கள் என்ற விபரம் கேட்டு குறிப்பாணை அனுப்பப்பட உள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

கம்பியாளரில் இருந்து வணிக உதவியாளராகவும், மின்பாதை ஆய்வாளரில் இருந்து வணிக ஆய்வாளராக பதவி மாற்றம் பெற்றவர்கள் இரு பதவிகளிலும் பணியாற்றிய காலத்தை கணக்கில் கொண்டு தேர்வு நிலை வழங்க வேண்டும் என்று வாரியத்திடம் கடிதம் கொடுத்து வலியுறுத்தி வருகிறோம்.

தோழமையுள்ள

**(எஸ்.எஸ. சுபபரமணயன்)**
பொதுச் செயலாளர்

***கடைசி செய்தி :***

2013-14 ஆம் ஆண்டுக்கான போனஸ் கோரிக்கை மீது பேச்சு வார்த்தை நடத்த 7.10.2014 ல் தேதி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டு போனஸ் நன்கொடையாக சென்ற ஆண்டு வசூலித்ததைப் போல் ரூ. 200/- ஐ போனஸ் நன்கொடையாக வசூலிப்பது. அதற்கான இரசீது புத்தகங்கள் மாநில மையத்திலிருந்து இன்னும் சில தினங்களில் அனுப்பி வைக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

**தேசிய மின்சார பொறியாளர் மற்றும் தொழிலாளர் கூட்டமைப்பின் சார்பில்**

# மாநிலம் முழுவதும் அக்டோபர் 14ல் ஒன்றுப்பட்ட இயக்கம்

இந்திய நாடு சுதந்திரம் பெற்று 67 ஆண்டுகள் கடந்த பின்னரும் 40 சதவீதம் இந்திய மக்களுக்கு மின்சாரம் கனவுப் பொருளாகவே உள்ளது. சுதந்திர இந்தியாவில் 1990 வரை மின்துறைக்கு முக்கியத்துவம் கொடுத்து மின்உற்பத்தி செய்து மக்களின் தேவைகளை ஓரளவிற்கு நிவர்த்தி செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன.

1990 ஆம் ஆண்டிற்கு பின்னர் மின்உற்பத்தியில் அரசு தனது கவனத்தை குறைத்துக் கொண்டு மின்உற்பத்தியில் தனியாரை ஊக்குவிக்கும் நிலை எடுத்தது. அதாவது 10வது ஐந்தாண்டு திட்டம் வரையில் மின்உற்பத்தியில் தனியாரின் பங்கு 9 சதவீதமாக இருந்து 12வது ஐந்தாண்டு திட்டத்தில் 35.3 சதவீதமாக மாறியுள்ளது. மின்உற்பத்தியில் அரசு தனியாரை நம்பியிருந்த காரணத்தினால் தான் தேவைக் கேற்ற மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியாமல் நாடு முழுவதும் மின்பற்றாக்குறை உச்சகட்டத்தை எட்டியுள்ளது. இன்றைய மின்பற்றாக்குறைக்கு இந்திய நாட்டை ஆண்ட அரசுகளும், அதன் கொள்கைகளும் என்பதை மக்கள் மத்தியில் கொண்டு சென்று மின்சாரம் மக்களின் அடிப்படை உரிமை, அதை அளிப்பது அரசின் கடமை என்று முழுக்கத்தை இந்திய மின்நுகர்வோர்கள் மத்தியில் கொண்டு செல்ல வேண்டியுள்ளது.

இரண்டாயிரம் ஆண்டுகளில் இந்திய மின்சாரத்துறையில் சுமார் 12 லட்சம் ஊழியர்கள் இருந்தது என்பது இன்றைக்கு அது 5 1/2 லட்சம் ஊழியர்களாக குறைக்கப்பட்டுள்ளனர். குறைக்கப்பட்ட இடங்கள் அனைத்தும் ஒப்பந்த தொழிலாளிகளை பணிக்கு அமர்த்தி அவர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் உள்ளிட்ட எந்த சட்ட சலுகைகளையும் அளிக்காமல் உழைப்புச் சுரண்டலை அரங்கேற்றுவதோடு தொழிலாளிகள் போராடிப் பெற்ற ஓய்வூதியம் போன்றவைகளை கேள்விக்குறியாக்கும் நடவடிக்கைகளை கைவிடும் வகையில் மின்சார சட்டம் 2003ல் தேவையான திருத்தங்களை வேண்டியும், நிரந்தரத் தன்மை வாய்ந்த பணிகளில் ஒப்பந்த தொழிலாளிகளை பணிக்கு அமர்த்தக் கூடாது என்பன போன்ற முழக்கங்களை மின்நுகர்வோர்கள், மின்வாரிய பணியாளர்கள் மத்தியில் கொண்டு செல்லும் வகையிலும் 8.7.2014 தேசிய மின்சார பொறியாளர்கள் மற்றும் ஊழியர்களின் கூட்டமைப்பு முடிவினையொட்டி தமிழகம் முழுவதும் இம் முழக்கங்களை பணியாளர்கள், பொது மக்கள் மத்தியில் கொண்டு செல்லும் வகையில் இந்த இணைப்புக்குழு சங்கங்கள் எதிர்வரும் 14.10.2014 அன்று மின்வாரிய அலுவலகங்கள் முன்னர் நுழைவாயிற் கூட்டங்கள் நடத்திட கேட்டுக் கொள்கிறோம்.

முன்வைக்கப்பட்ட முழுக்கங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து இந்த நுழைவாயிற் கூட்டங்களை வெற்றிகரமாக்கிட திட்டமட்டத்தில், இச்சங்கங்களின் இணைப்புக்குழு கூட்டத்தை கூட்டி திட்டமிட வேண்டுகிறோம்.

| | | |
|---|---|---|
| தமிழ்நாடு<br>மின்சார தொழிலாளர்<br>சம்மேளனம் | தமிழ்நாடு<br>மின்ஊழியர் மத்திய அமைப்பு<br>(சிஐடியு) | தமிழ்நாடு<br>மின்கழக தொழிலாளர்<br>முன்னேற்ற சங்கம் |
| தமிழ்நாடு<br>மின்வாரிய பொறியாளர்<br>கழகம் | தமிழ்நாடு<br>மின்வாரிய பொறியாளர்<br>சங்கம் | தமிழ்நாடு<br>மின்துறை பொறியாளர்<br>அமைப்பு(TNPEO) |

# தேசிய மின்சார பொறியாளர் மற்றும் தொழிலாளர் கூட்டமைப்பு சார்பாக 14.10.2014 அன்று நடைபெறும் இயக்கத்தின் கோரிக்கைகள்

**கோரிக்கைகள்**

- சேவைத்துறையாம் மின்துறையை பொதுத்துறையாகவே பாதுகாத்திடும் வகையில் மின்சார சட்டம் 2003ல் திருத்தங்கள் செய்திடுக.
- தமிழக மின்துறையில் பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளர்களை பணிநிரந்தரம் செய்திடுக.
- மின்வாரிய பிரிப்பு அமுலாக்கத்தையொட்டி ஏற்பட உள்ள முத்தரப்பு ஒப்பந்தத்தை உடனே ஏற்படுத்திடுக.
- தமிழக மக்கள் அனைவருக்கும், விவசாயிகள், தொழிற் சாலைகளுக்கு தங்குதடையில்லா மின்சாரம் வழங்கிட துரித நடவடிக்கை எடுத்திடுக.
- சென்னை போன்ற மாநகரங்களில் மின்நுகர்வோர்கள் எண்ணிக்கை அதிகம் உள்ளதால் மக்களின் குறைபாடுகளை நிவர்த்தி செய்து மின்சாரத்தை தடையில்லாமல் வழங்கிட ஒவ்வொரு உப கோட்டத்திற்கும் மின்தடை பழுது நீக்கும் மையம் Fuse of Call Centre) தொடங்கிட வேண்டும்.
- களப்பிரிவு மற்றும் அலுவலகப் பிரிவில் உள்ள காலிப்பணியிடங்களை பதவி உயர்வு உள்ளிட்டு வழங்கி உடனே நிரப்பிட வேண்டும்.
- வாரியத்தின் வருவாயை முறைப்படுத்திடும் வகையில் அட்டைப் பட்டியல் பிரிவில் உள்ள காலிப்பணியிடங்களை உடனே நிரப்பிடுக.
- புதிய பென்ஷன் திட்டத்தை கைவிட்டு பழைய ஓய்வூதிய திட்டத்தையே அமலாக்கிட,
- சி.பி.எஸ். திட்டத்தில் பணப்பிடித்தம் செய்ததற்கு சரியான கணக்கு விபரச் சீட்டை (Accounts Slip) உடனடியாக வழங்கிடுக.
- ஆண்டிற்கு ஒருமுறை களப்பிரிவு உள்ளிட்ட அனைத்துப்பிரிவு ஊழியர்களுக்கும் மார்ச் 31ந் தேதிக்குள் முதன்மைப் பட்டியல் வழங்கிடுக.
- பதவி உயர்வு ஒதுக்கீடு ஊர்மாற்றங்களில் வாரிய விதிமுறைகளை முறையாக அமல்படுத்திடுக.
- பிரிவு அலுவலகங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை உடனடியாக செய்திடுக.

# மாநில பொதுத்துறை சங்கங்களின் ஒருங்கிணைப்புக்குழு

## இந்திய தொழிற் சங்க மையம் (சிஐடியு)

## 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005.

**சுற்றறிக்கை எண்** **நாள் 24.09.2014**

அன்பான தோழரே,

வணக்கம்

மாநில பொதுத்துறை சங்கங்களின் ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் 23.9.2014 அன்று சிஐடியு மாநிலக்குழு அலுவலகத்தில் தோழர் எஸ்.எஸ். சுப்பிரமணியன் தலைமையில் கூடியது.

இக் கூட்டத்தில் சிஐடியு மாநில பொதுச் செயலாளர் தோழர் ஜி. சுகுமாறன், உதவிப் பொதுச் செயலாளர்கள் தோழர் வி. குமார், கே. திருச்செல்வன், மாநிலத் துணைத் தலைவர் ஏ.பி. அன்பழகன், கே. விஜயன் மற்றும் தி. ஜெயசங்கர் - மின்சாரம், எம். பாலகுமார் மற்றும் மா. ஆத்மநாதன் - குடிநீர் வடிகால் வாரியம், ஆ. கிருஷ்ணமூர்த்தி - கூட்டுறவு, வி. உதயகுமார் - சர்க்கரை, ஈ. சண்முகவேலு - நுகர்பொருள், வா. சக்கரவர்த்தி - பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழகம் ஆகிய சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

அரங்கங்களில் இருந்து வந்த தோழர்கள் அந்தந்த நிறுவன நிலமைகளை விரிவாக எடுத்துரைத்தனர். மாநில பொதுத்துறை நிறுவனங்களில் ஸ்தாபன பலத்தை விரிவாக்குவது. இல்லாத துறைகளில் நமது ஸ்தாபனத்தை உருவாக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ள வேண்டுமெனவும் நான்கு மாதத்திற்கு ஒரு முறை மாநில பொதுத்துறை நிறுவன பிரதிநிதிகள் கூட்டத்தை கூட்டுவதெனவும் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

தீபாவளி பண்டிகை நெருங்கி வரும் நிலையை கணக்கில் கொண்டு 2013 - 2014 ஆம் ஆண்டிற்கான போனஸ் கோரிக்கையை அந்தந்த நிறுவனங்களில் 20 சதவீதம் போனசும், 10 சதவீத கருணைத் தொகையும் அனைத்து உச்ச வரம்புகளையும் நீக்கி வழங்குவது சம்மந்தமான கோரிக்கையை நமது ஸ்தாபன கோரிக்கையாக 30.9.2014 க்குள் கொடுத்துவிடுவது.

சென்ற ஆண்டு போனஸ் வழங்குவது சம்மந்தமாக தமிழக அரசு நிதித்துறை சார்பாக வெளியிடப்பட்ட சுற்றறிக்கையில் பாதகமான அம்சங்களை சுட்டிக்காட்டி குறிப்பாக குடிநீர் வடிகால் வாரியம் போன்ற நிறுவனங்களுக்கு 10 சதவீதம் போனசும் கருணைத் தொகை வழங்குவது சம்மந்தமாக உத்தரவு பிறப்பித்த பின்னரும் 8.33 சதவீதமே வழங்கியதை சுட்டிக்காட்டி அவை போன்ற அத்துமீறல்களை குடிநீர் வடிகால் வாரியம் கைவிட்டு தமிழக அரசு நிதித்துறையில் சொல்லப்பட்ட சுற்றறிக்கையின் அடிப்படையிலாவது போனசும், கருணைத் தொகையும் வழங்கிட வேண்டும் என்ற கடிதத்தை சம்மந்தப்பட்ட துறைக்கு அனுப்புவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

நாம் வைக்கும் போனஸ் கோரிக்கையில் அந்தந்த நிறுவனங்களில் பணியாற்றும் நிரந்தர ஊழியர்களுக்காக வைக்கப்படும் கோரிக்கையையே அந்நிறுவனத்தில் பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளர்கள், தினக்கூலி, பகுதி நேர, தொகுப்பூதியம் பெரும் தொழிலாளர்களுக்கும், போக்குவரத்து போன்ற துறைகளில் பணியாற்றும் ரிசர்வ் தொழிலாளர்களுக்கும், அரசு பண்ணைகளில் பணியாற்றும் பண்ணைத் தொழிலாளர்களுக்கும் பாகுபாடு இன்றி போன்ஸ் வழங்கப்பட வேண்டும் என்பதை நமது கோரிக்கையில் ஒன்றாக வைத்திட வேண்டும்.

போனஸ் கோரிக்கையின் மீது தொழிற்சங்கங்களோடு பேச்சு வார்த்தை நடத்தியே அறிவிக்க வேண்டும் என்பதை நமது கோரிக்கையாக வைத்திட வேண்டும்.

**7.10.2014 மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம்**

நாம் வைத்த கோரிக்கைளை வலியுறுத்துகின்ற வகையில் அரசின் கவனத்தை ஈர்க்கின்ற வகையில் 7.10.2014 அன்று அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன் துறை வாரியான பொதுத்துறை ஊழியர்கள் கலந்து கொள்ளும் கோரிக்கை கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடத்திட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

ஆவின் நிறுவனத்தில் நடைபெறுகின்ற ஊழல், கலப்படம் போன்றவைகள் சம்மந்தமாக ஒரு வெள்ளை அறிக்கை சமர்ப்பிக்க நிர்வாகத்தை வலியுறுத்தும் தீர்மானம் ஒன்றும், அதைப்போல் பூம்புகார், கம்பல் போக்குவரத்து கழகத்தில் உள்ள பழைய கப்பல்களை மாற்றி புதிய கப்பல்கள் வாங்குவது சம்மந்தமாக கடிதம் எழுதுவது என்று முடிவு செய்யப்பட்டது.

போனஸ் பிரச்சனை முடிவுக்கு வந்த பின்னர் துறை வாரியான கோரிக்கைகளை பட்டியலிடுவது, அதை அடைய நடவடிக்கை எடுப்பதோடு நமது ஸ்தாபன விரிவாக்கம் சம்மந்தமாகவும் மாநில பொதுத்துறை சங்கங்களின் விரிவடைந்த கூட்டத்தை நவம்பர் மாதத்தில் கூட்டுவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

தோழர்களே, முடிவினை முழுவதுமாக அமல்படுத்துவதற்கான நடவடிக்கை எடுத்திட வேண்டுகிறோம்.

தோழமையுள்ள

கன்வீனர்

மாநில பொதுத்துறை நிறுவனங்களின்

ஒருங்கிணைப்புக்குழு

# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் :158/CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு:CITU&EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005.

**Telephone No : 044-28548529** **E-mail: coteecitu@gmail.com**
**Fax No : 044-28516574** **Web: www. cotee.org**


**சுற்றறிக்கை எண் 23/2014** **நாள் : 09/10/2014**

**பெறுநர்**

மாநில நிர்வாகிகள்
கிளைச் செயலாளர்கள்
மாநில செயற்குழு உறுப்பினர்கள்

அன்பான தோழரே,

வணக்கம்,

## போனஸ் பேச்சு வார்த்தை

மின் வாரிய ஊழியர்களுக்கு 2013 - 2014 ஆம் ஆண்டுக்கான போனஸ் வழங்குவது சம்மந்தமாக தொழிற்சங்கங்களோடு 7.10.2014 அன்று பேச்சு வார்த்தை நடைபெற்றது.

பேச்சு வார்த்தையில் மின் ஊழியர் மத்திய அமைப்பு சார்பாக 2013 - 2014 ஆம் ஆண்டுக்கான கூடுதல் போனசுக்கான கோரிக்கையாக

1) வாரிய ஊழியர்கள், அலுவலர்கள், பொறியாளர்கள் ஒப்பந்த தொழிலாளர்கள் மற்றும் பகுதி நேர ஊழியர்களுக்கு போனஸ் மற்றும் கருணைத் தொகை 30% வழங்கிட வேண்டும்.

2) போனஸ் வழங்கும் சட்டத்தில் உள்ள ஊதிய வரம்புகளை கணக்கில் கொள்ளாமல் பொறியாளர்கள், அதிகாரிகள் உட்பட அனைத்து ஊழியர்களுக்கும் 30 சதம் போனஸ் மற்றும் கருணைத் தொகையும் வழங்கப்பட வேண்டும்.

3) 31.3.2014 வரை பணியாற்றும் நீதிமன்ற தீர்ப்புக்கு அப்பாலும் உள்ள பகுதி நேர ஊழியர்கள் மற்றும் ஒப்பந்த தொழிலாளர்களுக்கு நிரந்தர தொழிலாளர்களுக்கு வழங்குவதைப் போல 30 சதம் போனஸ் மற்றும் கருணைத் தொகையும் வழங்கிட வேண்டும்.

4) மின் வாரியத்தில் 155 ஒப்பந்த தொழிலாளர்கள் தான் பணியாற்றுகின்றார்கள் என்று வாரியம் சொல்லும் வாதத்தை ஏற்றுக் கொள்ள இயலாது அனல், புனல், பொதுக்கட்டுமான வட்டம் மற்றும் விநியோகப்பகுதிகளில் சுமார் 6000 க்கும் மேற்பட்ட ஒப்பந்த தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர். அவர்கள் அனைவரையும் அடையாளம் கண்டு போனசும் கருணைத் தொகை வழங்குவதற்குண்டான ஏற்பாட்டை செய்திட வேண்டும்.

அக்டோபர் 22 இல் தீபாவளிப் பண்டிகை வருகின்ற நிலையில் இன்னும் 15 தினங்களே உள்ளதையும் கணக்கில் கொண்டு கூடுதல் போனஸை 10.10.2014 க்குள் வழங்கிட வேண்டும்